# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## CC.No. 71/2008

## வழக்கு சாட்சி PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அமுதா** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : | கணவர் பெயர் | : அறிவழகன் |
| கிராமம் | : ஆலடிப்பட்டி–பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 47/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை, A3, A4, A5, A6 ஆஜரில் உள்ளனர்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது கணவர் பெயர் அறிவழகன் என்றால் சரிதான் . சம்பவ தினத்தன்று எனது கணவர் வெளியே திண்டுக்கல் வரை சென்றிருந்தார். சம்பவத்திற்கு முன்பு எனது குடும்பத்திற்கும் , எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை நிலவி வந்தது என்றால் சரிதான். எனது கணவர் அறிவழகன் , எதிரிகளின் உறவினர் மணிகண்டன் என்பவரிடம் சண்டைபோட்டதன் காரணமாக மணிகண்டன் விஷம் அருந்தி இறந்துவிட்டதன் காரணமாக எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகளுக்குமிடையே முன்விரோதம் நிலவி வந்தது என்றால் சரியல்ல . சம்பவம் தொடர்பாக தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம், அவர்கள் நீதிமன்றத்தில் மனு செய்து வழக்கு தொடுத்தோம். என்னிடம்

காட்டப்படும் துணைக் காவல்கண்காணிப்பாளர் அலுவலருக்கு கொடுத்த புகார் நான் கொடுத்தது என்றால் சரிதான் . சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதிக்கு 1 மாதம் கழித்து தான் காவல்துறை துணைக்கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான், புகார் கொடுத்தும் காவல் நிலையத்தில் எடுக்காததாலும் , எதிரிகள் மீண்டும் மீண்டும் பிரச்சனை செய்ததால் காலதாமதம் ஏற்பட்டது.

காவல் துணைக்கணிப்பாளரிடம் கொடுத்த புகாரில் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு , புகார் எடுக்காத விபரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுகுறித்து எனக்கு சரியாக தெரியவில்லை . தாண்டிக்குடி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை காவல் துணைக்கணிப்பாளரிடமோ, நீதிமன்றத்திலோ தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு சரியாக நினைவில்லை. நீதிமன்றத்தில் நான் வழக்கு தொடுத்ததால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது . நான் நீதிமன்றத்தில் எந்த ஒரு வழக்கும் தொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி சேலையை பிடித்து இழுத்ததாக புகாரிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் சொல்லியுள்ள நிலையில் போலீசார் விசாரணையின் அடிப்படையில் அந்த சேலையை என்னிடம் கைப்பற்றினார்களா என்றால் போலீசார் விசாரணைக்கு வரவில்லை.

போலீசார் வழக்கு பதிவு செய்த பிறகு என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. வழக்கு பதிவு செய்த பிறகு போலீசார் சம்பவ இடத்தை வந்து பார்வையிட்டர்களா என்றால் பார்வையிட்டார்கள். வீட்டில் உடைக்கப்பட்ட டிவியை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை, ஆனால் பார்வையிட்டு சென்றார்கள். உடைக்கப்பட்ட பொருட்களில் இருந்து போலீசார் கைரேகை எதுவும் எடுத்தார்களா என்றால் இல்லை. புகாரில்

ரூ.80,000/- முதல் ரூ.1,00,000/- வரை காணாமல் போனதாக சொல்லியுள்ளேன், எவ்வளவு தொகை தற்போத எனக்கு குறிப்பிட்டு நினைவில்லை . காணாமல் போனதாகச் சொல்லப்படும் தொகை பெரிய அளவிலான தொகை என்பதால் எதற்காக அந்த தொகையை வீட்டில் வைத்திருந்தேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நாகராஜன் எனக்கு அக்கா கணவர், எனக்கு மாமா ஆவார். போலீசார் மருத்துவமனையில் இருந்ததாகச் சொல்லப்படும் நாகராஜனிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பெற்றுச்சென்றார்களா என்றால் இல்லை . எனது அக்கா கணவரான நாகராஜனுக்கு தேனி , பெரியகுளம் இலட்சுமி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டதாக புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான் . சம்பவத்திற்கு முன்பு இலட்சுமி மருத்துவமனைக்கு அவ்வப்போது சென்று வருவேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும், என் வீட்டில் உள்ள பொருட்களை சேதம் செய்யவில்லை என்றாலும் , என் சேலையை பிடித்து இழுத்து என்னை மிரட்டவில்லை என்றாலும், எனது கணவர் மணிகண்டனுடன் சண்டையிட்டு அவர் விஷம் குடிக்குமாறு செய்தார் என்றாலும் , அதன் காரணமாக மணிகண்டன் இறந்த காரணத்தால் எதிரிகள் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் எனது கணவர் மீது புகார் கொடுத்திருந்தார்கள் என்றாலும், அதன் காரணமாக எதிரிகளை பழிவாங்க நான், எனது கணவர், எனது அக்கா ராணி, எனது அக்கா கணவர் நாகராஜன், எனது மகள் ஆர்த்தி ஆகியோர் திட்டம் தீட்டி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல, மணிகண்டன் என்ற நபர் இறந்த சமயத்தில் எனது கணவர் அறிவழகன் ஊரிலேயே இல்லை, ஆனால் எனது கணவர், மணிகண்டனை அடித்து கொண்று விட்டதாகச்சொல்லி வீட்டின் பொருட்களை உடைத்து விட்டார்கள் . மணிகண்டன் இறந்த அன்று எனது கணவரை திட்டமிட்டு கொலை பழியில்

இருந்து தப்பிக்க வைக்க வேண்டி வெளியூருக்கு அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல, மணிகண்டன் யார் என்று எனக்குத் தெரியாது.

நான் சொன்னது போன்று நடைபெற்றிருந்தால் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் புகாரை பதிவு செய்து , நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் , நான் சொன்னதுபோன்று சம்பவம் நடைபெறாத காரணத்தால்தான் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல , சம்பவம் நடைபெற்றது . புகாரிலோ, முதல் விசாரணையிலோ சொன்னது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் , எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல . நடக்காத சம்பவத்தை நடந்ததாகச் சொல்லி வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . புகாரில் ஒரு சங்கதியையும் , நீதிமன்ற சாட்சியத்தில் ஒரு சங்கதியையும் மாற்றிச்சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:05 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 71/2008**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராணி** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : ------ | கணவர் பெயர் | : நாகராஜன் |
| கிராமம் | : பெரும்பாறை | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை, A3, A4, A5, A6 ஆஜரில் உள்ளனர்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.2 அமுதா எனது தங்கை ஆவார் . அறிவழகன் எனக்கு கொழுந்தன் ஆவார் . அமுதா அறிவழகனுக்கும், எதிரிகளுக்கும் இடையே இந்த புகார் கொடுப்பதற்கு முன்பே முன்விரோதம் நிலவி வந்தது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. எனது கணவர் நாகராஜன் மருத்துவமனையில் இருந்த சமயத்தில் போலீசார் அவரிடம் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியவில்லை . எதிரிகள் பீரோவில் இருந்து பணத்தை எடுத்ததாக நான் சாட்சியம் அளித்துள்ள நிலையில் பிரோவில் பணம் இருந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் . பிரோவில் எவ்வளவு பணம் வைக்கப்பட்டிருந்தது என்றால் ரூ .5000/– வைக்கப்பட்டிருந்தது. அறிவழகனுக்கும், மணிகண்டனுக்கும்

பிரச்சனை ஏற்பட்டு அதில் மணிகண்டன் விஷம் அருந்தி இறந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. இந்த வழக்கு பிரச்சனை சம்பந்தமாக நான் மருத்துவமனையில் ஏதேனும் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் எடுத்துக்கொண்டேன் . எனது கணவர் நாகராஜனை தேனி, பெரியகுளம் இலட்சுமி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்திருந்தோம் என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு இலட்சுமி மருத்துவமனைக்கு நானும் , எனது கணவர் நாகராஜனும் அவ்வப்போது சென்று வருவோம் என்றால் சரியல்ல . சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் எனது தங்கை அமுதா புகார் கொடுத்தார். சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. நான் சொன்னதுபோன்று எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , அமுதாவின் கணவர் அறிவழகன், மணிகண்டனுடன் சண்டையிட்டு அதனால் மணிகண்டன் விஷம் அருந்தி இறந்துவிட்டார் என்றாலும் , அதனால் மணிகண்டனின் உறவினரான எதிரிகள் அறிவழகன் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றாலும் , அதனால் எதிரிகளை பழிவாங்கவேண்டி அறிவழகனும் , அமுதாவும் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் சொன்னதுபோன்று சம்பவம் நடைபெற்றிருந்தால் தாண்டிக்குடி காவல்நிலையத்தில் சம்பவம் நடந்த 1-2 நாட்களிலேயே நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் , நான் சொன்னதுபோன்று சம்பவம் நடைபெறாததால் தான் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல . எனது கணவருக்கு சம்பவத்தில் காயம் ஏற்பட்டிருந்தால் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் சமயத்திலேயே தகவல் தெரிவிக்கப்பட்டு போலீசார் மருத்துவமனைக்கு வந்திருப்பார்கள் என்றாலும் , எனது கணவருக்கு சம்பவத்தில் எந்த காயமும் ஏற்படாத காரணத்தால்

தான் போலீசாருக்கு மருத்துவமனையில் இருந்து எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல . எதிரிகள் என்னையோ, எனது தங்கையையோ , எனது கணவரையோ தாக்கவில்லை என்றால் சரியல்ல . எதிரிகள் எந்த ஒரு பொருட்களையோ, அடித்து நொருக்கவோ, திருடவோ இல்லை என்றால் சரியல்ல . எதிரிகள் எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் , எதிரிகளை பழிவாங்கவேண்டி வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:11 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 71/2008**

**வழக்கு சாட்சி PW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அறிவழகன்** | தொழில் | : பழக்கடை வியாபாரம் |
| தகப்பனார் பெயர் | : மொக்கச்சாமி | கணவர் பெயர் | : ------- |
| கிராமம் | : வத்தலக்குண்டு | இனம் | : ஆண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 57/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை , A3, A4, A5, A6 ஆஜரில் உள்ளனர்)**

**<u>சாட்சி மனுவின்பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனது மனைவி கொடுத்த புகாரில் எனக்கும், எதிரிகளுக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . சம்பவ தினத்தன்று நான் வெளியூரில் இருந்தேன் என்றால் சரிதான் . சம்பவம் தொடர்பாக எனது மனைவி தகவல் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான் . நான் சொன்னதுபோன்று எந்த விதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் , நான் மணிகண்டனிடம் பிரச்சனை செய்த காரணத்தால் மணிகண்டன் விஷம் அருந்தி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல . மணிகண்டனுடன் நான் பிரச்சனை செய்து அவர் இறந்த காரணத்தால் எதிரிகள் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்த காரணத்தால் நான் வெளியூர் சென்றுவிட்டு, எனது மனைவி மற்றும் மனைவியின் உறவினர்கள் மூலம் பொய் புகார் கொடுக்கச்செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:17 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 71/2008**

**வழக்கு சாட்சி PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சிவசாமி** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : சின்னமுத்து | கணவர் பெயர் | : ------- |
| கிராமம் | : பெரும்பாறை | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 54/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.07.2026 |

**( எதிரிகள் A1, A2 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை, A3, A4, A5, A6 ஆஜரில் உள்ளனர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் பெரும்பாறையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல . தேதி வருடம் நினைவில்லை. நான் பெரும்பாறையில் இருந்து பண்ணைக்காட்டிற்கு காலை 09.30 – 10.00 மணியளவில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன் . அப்போது பண்ணைக்காடு, ஸ்டோர் ரூம் கடை அருகே கூட்டமாக சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சண்டையை விலக்கி விட்டேன், பிறகு வேலைக்கு சென்றுவிட்டேன் . யார் யார் சண்டை போட்டார்கள் என்ற விபரம் தெரியாது . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் தோன்றிய வழக்கறிஞர் திரு . முரளி அவர்கள் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதால் , அதன்பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.20 18:31:23 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.